# APRIL 1995

[SB 6 5 9]

## FINAL B.S.M.S. DEGREE EXAMINATION.

### Paper I — MARUTHUVAM — POTHU

Time : Three hours Maximum : 100 marks

Answer ALL questions.

1. இரத்தக் கொதிப்பு நோய்வரும் வழி, தனி நோயா, தொடர் நோயா, பொது குறிகுணங்கள், நாடி நடை பரிகாரம் கூறுக. (15)

2. பாண்டு, சோபை, காமாலை இவற்றைத் தொடர்பு படுத்தி எழுதுக. இதன் குறி குணங்கள், இதன மருத்துவப் பரிகாரம், எழுதுக. (15)

3. சூலை நோயின் வகைகளை குறிப்பிட்டு, ஒவ்வொன்றின் குறி குணங்கள், அகப்புற மருத்துவம், பத்தியம் எழுதுக. (15)

4. கீல்வாயுவின் வகைகள் ஒவ்வொன்றையும் விவரித்து எழுதுக. பத்தியம், மருத்துவம் கடைபிடிக்கவேண்டிய விதி முறைகளைக் கூறுக. (15)

5. மதுமேக நோயைப் பற்றி விபரமாக எழுதுக. இதன் அவத்தைகள் யாவை? மருத்துவம், கடைபிடிக்கவேண்டிய விதிமுறைகள், ஆசனம், உணவு வகைகள் விவரிக்க. (20)

6. பெருவயிறு நோய் எக்காரணங்களால் உண்டாகிறது? அவற்றை எப்படி அறிவது? இந்நோயில் காணும் குறிகுணங்கள் நாடிநடை, தீரும், தீராதவை வழக்கு மருத்துவம், பத்தியம் கூறுக. (20)

———

## NOVEMBER 1995

[MB 1044]

# Final B.S.M S. Degree Examination

Paper I - MARUTHUVAM POTHU

Time : Three hours Maximum : 100 marks

Anrwer All questions

1. மேகநீர் எத்தனை வகைப்படும் ? குற்றத்தின் அளவாக ஒவ்வொரு குற்றத்தின் கீழ்வரும் மேகநீர் வகையினை எழுதுக. நீரழிவு நோயில் காணும் 10 வகைத் துன்பங்கள் யாவை ? மதுமேகத்திற்கு மருத்துவ பாரத்தில் கூறிய மருத்துவ முறைகளை எழுது. இந்நோய்க்குத் தொடர்பான நோய் வருவனவற்றைக் கூறி, அகப்புற மருத்துவத்தையும் எழுதுக (15)

2. வரட்டு மஞ்சள் நோய், நீர் பெருவயிறு தமரக நோய் இந்நோய்களின் காரணம் குறிகுணங்கள், பரிகாரம் முதலியவற்றை விவரி ? (15)

3 கீல்வாதமும், நரித்தலைவாதமும் ஒன்றா ? அல்லது வெவ்வேறு வகையா இதனை தனித்தனியே விவரித்து நோய் வரும்வழி குறிகுணங்கள் முற்குறிகள், நாடிநடை மருத்துவம், கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள் இதனை தெளிவுபடுத்துக (20)

4 விக்கல் வாந்தி இவ்விரண்டும் தனிநோயா அல்லது மற்ற நோயுடன் தொடர்புடையதா விவரிக்க. இ∴து எதனால் வருகின்றது. இதற்கு எந்த நரம்பு செயல்படச் செய்கிறது. அதி தீவிரமான நோயுடன் விக்கல் சேர்ந்தால் அந்நோய் குணமாகாது என்பது எதனால் விக்கல், வாந்தி நோய் குணமடைய சிறப்பான மருத்துவத்தை எழுதுக. (15)

5. வைசூரி நோயின் வகைகளைக் குறிப்பிட்டு இவைகள் வரும் காரணம், நோய்நடை, குறிகுணங்கள், நாடிநடை, தீரும், தீராதவை, மருத்துவம், நோயாளியும், நோயாளியுடன் இருப்பவர்களும் கடைபிடிக்க வேண்டிய முறைகளையும் தெளிவாக எழுதுக (15)

6 வாத நோய்களை வகைப்படுத்தி அவற்றின் பொதுவான முற்குறி தோற்றங்களை விரிவாகக் கூறி பக்கவாத நோய் எவ்விதம் ஏற்படுகிறது குறிகுணங்கள், தீர்க்கும் வழிமுறைகளை விளக்குக ? அசாத்திய நிலையில் கடைபிடிக்கவேண்டிய பரிகாரங்களை எழுதுக ? (20)

———

## APRIL 1996

**[AK1054A]**

### FINAL B.S.M.S. DEGREE EXAMINATION

### Paper I — MARUTHUVAM — POTHU

Time : Three hours | Maximum : 100 marks

**Answer ALL questions.**

1. குருதி அழல் நோய் எத்தனை வகைப்படும்? இதில் கீழ்நோக்கு குருதி அழல் நோய் எந்தெந்த நிலைகளில் ஏற்படும் என்பதை விரிவாக எழுதி அதில் ஏதாவதொரு நோய்க்குப் பரிகாரம் எழுதவும். (20)

2. முக்குற்ற நோய் உண்டாகக் காரணங்கள் யாவை? முக்குற்ற நோயின் நாடி நடையை விவரிக்கவும். இந்நோய்க்கான பைரவ மாத்திரைகளை எழுதவும். (15)

3. பக்கவாத நோய்க்கான காரணங்கள் யாவை? காரணங்களை கொண்டு இந்நோயை பரிகரிக்கும் முறைகளை எழுதவும். (20)

4. நிணக்கழிச்சல் எத்தனை வகைப்படும்? பொதுக் குறிகுணங்களை எழுதவும். கடுப்பு கழிச்சதுக்கான பரிகாரம் எழுதவும். (15)

5. அம்மை நோயின் அசாத்திய குறிகுணங்கள் யாவை? அவற்றில் ஏதாவது இரண்டிற்கு பரிகாரம் எழுதவும். (15)

6. குறிப்பு வரைக : (15)

   (அ) பக்க மந்தார காசம்.

   (ஆ) உளை மாந்தை.

   (இ) சொட்டு நீர்.

# APRIL 1997

**[MP 1114]**

சித்த மருத்துவ அறிஞர்

FINAL B.S.M.S. DEGREE EXAMINATION.

Paper I — POTHU MARUTTHUVAM

Time : Three hours — Maximum : 100 marks

Answer Section A and B in separate answer books.

Answer ALL questions.

## SECTION A

1. (அ) சுர நோயின் மருத்துவத்தை விளக்குக. (10)

   (ஆ) பெருவயிறு நோயின் பொது மருத்துவம் மற்றும் சிறப்பு மருத்துவத்தை விளக்குக. (10)

2. தமரக நோயின் காரணங்கள், குறிகுணங்கள், மருத்துவம், உணவு இவற்றினை விளக்குக. (15)

3. குன்ம நோயின் இயல், நோயின் காரணங்கள், முற்குறிகள், பொதுகுறி குணங்கள் இவற்றினை விளக்கி மருத்துவத்தையும் கூறுக. (15)

## SECTION B

4. வெருப்பு நோய், ஊதல் நோய் இவற்றிற்கான ஒற்றுமை வேற்றுமைகளை விளக்கி மருத்துவம் பத்தியம் இவற்றினை விளக்குக. (20)

5. நீரிழிவு நோய்க்கான காரணம், குறிகுணம் இவற்றுடன் மருத்துவத்தையும் விளக்குக. (15)

6. சிறு குறிப்பு வரைக : (15)

   (அ) செங்கமலக் காமாலை.

   (ஆ) நரித்தலை வாதம்.

   (இ) சுவாச பித்தம்.

**OCTOBER 1997**



சித்த மருத்துவ அறிஞர்

FINAL B.S.M.S. DEGREE EXAMINATION.

Paper I — POTHU MARUTTHUVAM

பொது மருத்துவம்

Time : Three hours                Maximum : 100 marks

Answer Sections A and B in separate answer books.

Answer ALL questions.

## SECTION A

1. பெருங் கழிச்சல், நிணக் கழிச்சல் இவற்றிற்கான ஒற்றுமை வேற்றுமைகளை விளக்கி மருத்துவத்தையும் விளக்குக. (20)

2. இளைப்பு நோய் காரணங்கள், பொதுகுறி குணங்கள், நாடி நடை, வகைகள், மருத்துவம், உணவு இவற்றினை விளக்குக. (15)

3. குறிப்பு வரைக : (15)

   (அ) களைவின்மை.

   (ஆ) சூரியாவர்த்தம்.

   (இ) வாதத்தலை நோக்காடு.

## SECTION B

4. பெரு வயிறு நோயின் காரணம், வகைகள், பொதுக்குறி, குணம், நாடி, மருத்துவம், சிறப்பு மருத்துவம் இவற்றை விளக்குக. (20)



[MS 1114]

5. கீல்வாயு நோயின் காரணம், வகைகள், மருத்துவம் இவற்றினை விளக்குக. (15)

6. குன்ம சூலை, கறைச் சூலை, பக்க சூலை இவற்றினை விளக்கி மருத்துவம், பத்தியம் விளக்குக. (15)

## APRIL 1998

**[SV 1114]**

சித்த மருத்துவ அறிஞர்

FINAL B.S.M.S. DEGREE EXAMINATION.

Paper I — PODHU MARUTTHUVAM

(பொது மருத்துவம்)

Time : Three hours  Maximum : 100 marks

Answer Sections A and B in separate answer books.

Answer ALL questions.

SECTION A

1. முக்குற்ற நோயின் இயல், நோய் வரும் வழி, இதன் வகைகளின் பெயர்களை குறிப்பிட்டு ஒவ்வொன்றையும் விவரித்து எழுதுக. நாடி நடை, மருத்துவம் கூறுக. (20)

2. (அ) விக்கல் தனி நோயா? தொடர்பு நோயா — விளக்குக. (10)

(ஆ) சோகை நோய்க்குறி குணங்கள் பற்றி தேரன் கூறுவது யாது? (10)

3. குருதி யழல் நோயின் பெயர்க்காரணம், நோய்வரும் வழி, முற்குறி குணங்கள், பொதுக்குறி குணங்கள், தீராக்குறி குணங்கள் பற்றிக் கூறுக. (10)

SECTION B

4. பெருவயிறு நோய் எத்தனை வகைப்படும்? அவை யாவை? தீரும் தீராதவை, பொதுக்குறி குணங்கள் — சிறப்பு மருத்துவம் உணவு பற்றிக் கூறுக. (15)

5. மதுமேகம் — வரும்வழி, முற்குறிகள், நீர்க்குறி, நெய்க்குறி, இந்நோயில் தோன்றும் அவத்தைகள், தேரன் கூறிய பாரத மருத்துவம் பற்றி விவரி. (20)

6. கீல்வாயுவின் இயல், வகை, குறி குணங்கள், சிறப்பு மருத்துவம் பற்றிக் கூறுக. (15)

---

## OCTOBER 1998

**[SM 1114]**

சித்த மருத்துவ அறிஞர்

FINAL B.S.M.S. DEGREE EXAMINATION.

Paper I — PODHU MARUTTHUVAM

(பொது மருத்துவம்)

Time : Three hours Maximum : 100 marks

Answer Sections A and B in Separate answer books.

Answswer ALL questions.

### SECTION A

1. வாத நோய் 80 வகைப்படும் என்று கூறப்படினும் சிறப்பாக மருத்துவமனையில் பரிகாரத்திற்கு வரக்கூடியவை யாவை? அவற்றின் கணிப்பையும் மருத்துவத்தையும் எழுதுக. (20)

2. எவ்வெந்நோய்களில் கல்லீரல், மண்ணீரல் வளர்ச்சியடையும். அந் நோய்களை குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றின் குறி குணங்களையும் மருத்துவ முறையையும், பத்தியத்தையும் எழுதுக. (20)

3. வயிற்றுப் பிடிப்பு என்றால் என்ன? இதன் வேறு பெயர் என்ன? இதன் இயல், நோய் வரும் வழி, முற்குறிகள், பொது குறிகுணம், குற்ற முதலிய வேறுபாடு, மருத்துவம் கூறுக. (10)

### SECTION B

4. சுரம் எத்தனை வகைப்படும்? அவற்றுள் முக்கியமானவை எவை? வாத, பித்த, கப சுரங்களின் குறி குணங்களையும், தீரா நிலைமைகளையும் கூறுக. அவற்றிற்கு சிகிச்சை முறைகளையும் பத்தியம் முதலியவற்றையும் விளக்கிக் கூறுக. (20)

5. இளைப்பு நோயின் குறிகுணம், நாடி நடை கேடடையும் தாதுக்கள், உள்ளுறுப்புகள், அசாத்திய குறிகுணங்கள் மருத்துவம், உணவு, ஆகியவற்றை விளக்குக. (15)

6. வாந்தி பேதி நோய் வரக் காரணங்கள் யாவை? இந் நோயில் காணும் தீராக் குறி குணங்கள் யாவை? இந் நோய்க்கு மருத்துவம் என்ன? (15)

---

APRIL 1999

[SG 1114]

சித்த மருத்துவ அறிஞர்

FINAL B.S.M.S. DEGREE EXAMINATION.

Paper I — PODHU MARUTTHUVAM

(பொது மருத்துவம்)

Time : Three hours Maximum : 100 marks

Answer Sections A and B in separate answer books.

Answer ALL questions.

SECTION A

1. பாண்டு எவ்வெவ் நோய்களில் தொடர்பு நோயாக வரும்? அவற்றின் இரண்டின் குறி குணங்களைக் கூறி, பொதுவாக பாண்டு நோயின் மருத்துவம், உணவு முதலியவற்றைக் கூறுக. (20)

2. நிணக் கழிச்சல், பெருங் கழிச்சல் இவ்விரு நோய்களும் தோன்றற்குரிய காரணங்களிலும், குறி குணங்களிலும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளையும் கூறி, பெருங் கழிச்சலின் பரிகார பத்தியத்தை எழுதுக. (20)

3. பக்கவாதம் — இந்நோய் பெரும்பாலும் எந்த வயதில் உண்டாகும்? இதில் கேடடையும் வாயுக்கள், உடற்கட்டுகள் கூறி இந்நோயின் பரிகாரம் மற்றும் தொக்கண முறையையும் விளக்குக. (10)

SECTION B

4. குன்ம நோய் விளக்குக. (20)

5. வெள்ளை நோயின் வகை, குறி குணங்கள் குற்ற முதலிய வேறுபாடுகள், நீர்க்குறி, நாடிநடை, மருத்துவம் ஆகியவற்றை விளக்குக. (15)

6. கல்லடைப்பு, சொட்டு நீர், நீர்ச்சுருக்கு இவைகள் தோன்றுவதற்கான முக்கிய காரணங்களைக் கூறி மருத்துவத்தையும் கூறுக. (15)

---

# OCTOBER 1999

**[KA 1114]**

சித்த மருத்துவ அறிஞர்

FINAL B.S.M.S. DEGREE EXAMINATION.

Paper I — PODHU MARUTTHUVAM

(பொது மருத்துவம்)

Time : Three hours Maximum : 100 marks

Answer Section A & B in separate Answer Books.

Answer ALL questions.

## SECTION A

1. இருமல், இரைப்பு, இளைப்பு, இந்நோய்களின் ஒற்றுமை, வேற்றுமைகளை விவரி. ஒவ்வொன்றுக்கும் உள்ள நாடி நடையைப் பற்றிக் குறிப்பிடுக. (20)

2. மஞ்சள் நோய் — இயல், நோய் வரும் வழி, முற்குறி, நோய் எண், தீரும் தீராதவை — மருத்துவம் கூறுக. (15)

3. குன்மம் இயல், நோய் தோன்றும், வகை, குறி குணங்கள் மருத்துவம் பற்றிக் கூறுக. (15)

## SECTION B

4. ஊழி நோய் — வரும் வழி, முற்குறிகள், பொதுக் குறிகுணங்கள், குற்ற முதலிய வேறுபாடுகள், மருத்துவம், உணவு பற்றிக் கூறுக. (10)

5. விக்கலுக்குரிய மருத்துவம் யாது? (10)

6. பக்கவாயுவின் இயல், முற்குறிகள், குற்ற முதலிய வேறுபாடுகள், தீரும் தீராதவை, மருத்துவ முறைகளை விளக்குக. (15)

7. அழல் நோய் — இயல், வரும் வழி, எண், பொதுக் குறி குணங்கள், மருத்துவம் கூறுக. (15)

## APRIL 2000

**[KB 1114]**

சித்த மருத்துவ அறிஞர்

FINAL B.S.M.S. DEGREE EXAMINATION.

(Old/New/Revised Regulations)

Paper I — PODHU MARUTHUVAM

(பொது மருத்துவம்)

**Time : Three hours** **Maximum : 100 marks**

**Answer Section A and B in separate answer books.**

**Answer ALL questions.**

### SECTION A

1. முக்குற்ற நோயின் இயல், நோய் தோன்றும் வழி, நோய் எண், அவற்றின் குறி குணங்கள் தீரும் தீராதவைகள், பரிகார முறைகளையும், சிறப்பாக பைரவ மாத்திரை பிரயோகங்களையும் எழுதுக. (20)

2. இரைப்பு நோயின் இயல், நோய் வரும் வழி, நோயின் முற்குறிகுணங்கள் வகைகள் குற்ற முதலிய வேறுபாடு பரிகாரம் இவற்றை எழுதுக. (15)

3. பெருங்கழிச்சல் நோய் வரும் வழி வகைகள், குறி குணங்கள் தீரும் தீரா நிலை பரிகாரம் இவற்றை எழுதவும். (15)

### SECTION B

4. வாத சுரம், பித்த சுரம், கப சுரம் இம்மூன்று சுரங்கள் வருவதற்குரிய காரணங்கள், அவற்றின் குறி குணங்கள், தொடர் நோய்கள், அவற்றிற்குரிய பரிகார முறைகளையும் எழுதுக. (20)

5. விக்கல் தனி நோயா? தொடர் நோயா? என்பதனை விளக்கி, தீரும் தீரா நிலை பரிகாரம் இவற்றை எழுதுக. (15)

6. காமாலை நோய் வரும் வழி வகைகள், அதில் குன்ம காமாலை, செங்கமல காமாலை, வரள் காமாலை இவைகளை விளக்கி பரிகாரம் எழுதவும். (15)

———————

OCTOBER 2000

**[KC 1114]**

சித்த மருத்துவ அறிஞர்

FINAL B.S.M.S. DEGREE EXAMINATION.

(Old/New/Revised Regulations)

Paper I — PODHU MARUTHUVAM

(பொது மருத்துவம்)

Time : Three hours Maximum : 100 marks

Answer Section A and B in separate answer books.

Answer ALL questions.

## SECTION A

1. இளைப்பு நோய் தோன்றும் வழி, பொதுகுறி குணங்கள், சித்த மருத்துவத்தில் இளைப்பு நோயின் பிரிவுகள், தீரும், தீரா இலக்கணம் மருத்துவம் கூறுக. (15)

2. தமரக நோயின் இயல், நோயின் முற்குறி குணங்கள், நோய் எண், ஒவ்வொரு பிரிவு தமரக நோயின் தனித்தனி குறிகுணங்கள் தீரும், தீராதவை, மருத்துவம் உணவு கூறுக. (20)

3. விக்கல் தனி நோயா, தொடர் நோயா? எந்தெந்த நோயில் தொடர் நோயாக வரும்? நோய் எண் குற்ற முதலிய வேறுபாடுகள் நாடி மருத்துவம் கூறுக. (15)

## SECTION B

4. நீரினைப் பெருக்கல் நோய்கள் யாவை? நீரிழிவு நோயின் முற்குறிக் குணங்கள், நோய் எண், இந்நோயில் காணப்படும் பத்து வகை அவத்தைகள் (துன்பங்கள்) நோயின் தீரும், தீராதவை, தேரன் மருத்துப் பாரதத்தில் கூறிய மருத்துவம் கூறுக. (20)

5. கீல்வாயு நோயின் வேறுபெயர்கள், நோய் வரும் வழி கூறி, வளி கீல்வாயு, ஐயக்கீல்வாயு நோயின் குறிகுணங்கள், குற்ற வேறுபாடுகள், மருத்துவம், சிறப்பு மருத்துவம் கூறுக. (15)

6. ஊதல் நோயின் இயல், நோய் வரும் வழி நோயின் பொது குறிகுணங்கள், மருத்துவம் கூறுக. (15)

———